செ.வெ.எண்: 11/ 2020 நாள்: 09.03.2020

# திருப்பூர் மாவட்டம்

## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், 29 பயனாளிகளுக்கு ரூ.14.50 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியரக பெருந்திட்ட வளாகத்தில் இன்று (09.03.2020) மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து வீட்டுமனைபட்டா மற்றும் முதியோர் உதவித் தொகை, புதிய குடும்ப அட்டை வேண்டியும், சாலைவசதி, குடிநீர் வசதி வேண்டியும் என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 332 மனுக்களை பெற்றுக் கொண்டதுடன் மனுதாரர்கள் முன்னிலையிலேயே விசாரணை செய்து அதன் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், 6 பயனாளிக்கு தலா ரூ.58,690/- மதிப்பில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டரும், 1 பயனாளிக்கு ரூ.12,000/- மதிப்பில் நவீன செயற்கை காலினையும், சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் பல்லடம் வட்டத்தைச் சார்ந்த 20 பயனாளிகளுக்கு தலா ரூ.12,000/- மதிப்பில் ரூ.2,40,000/- மதிப்பிலான முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகையினையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.8,50,000/- மதிப்பில் தீருதவித்தொகையினையும் என 29 பயனாளிகளுக்கு ரூ.14,54,140/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், சமூக பாதுகாப்பு தணித்துனை ஆட்சியர் திரு.விமல்ராஜ், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.முருகன், துணை ஆட்சியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**